4. அரசினர் தீர்மானங்கள்

(அ) பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, விதிகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானங்கள். பேரவைக் குழுக்களின் பணிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானங்கள் முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2003–2004 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்று, 2004–2005 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பெற்ற

1. மதிப்பீட்டுக் குழு

2. பொதுக் கணக்குக் குழு

3. பொது நிறுவனங்கள் குழு

4. விதிகள் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், மேற்படி குழுக்களின் பதவிக் காலத்தை வரையறுக்கும் பேரவை விதிகள், முறையே 195 (2), 203 (3), 211 (3), 256 (2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்ற வேண்டும்."

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் . . .*

*திரு. துரைமுருகன்: Point of Order. Sir, ஒரு பெரிய major request–ஐ அவர் வைத்திருக்கிறார். இருக்கிற குழுக்களை நீட்டிக்கலாம். நீட்டிக்கலாமா, வேண்டாமா என்பது இரண்டாவது பிரச்சினை. ஆனால், இப்படிப்பட்ட ஒரு முடிவை எடுக்கிறபோது, B.A.C.–யிலே அதுகுறித்து அவைத் தலைவரோடு உட்கார்ந்து, எதிர்க்கட்சித் தலைவரோடு உட்கார்ந்து, இவர்களையே வைக்கலாம் என்று இருக்கிறோம், நீங்கள் என்ன சொல்கிறீர்கள், உறுப்பினர்கள், அதே உறுப்பினர்கள் இருப்பார்கள், உறுப்பினர்கள் மாறமாட்டார்கள் என்று ஏதாவது சொல்லி, எங்களிடம் கேட்டிருக்க வேண்டும். திடீரென்று எழுந்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதைப் படித்து, நீங்களும் உடனே, ஏற்போர் 'ஆம்' என்க, மறுப்போர் 'இல்லை' என்க என்று சொல்லி முடித்துவிட்டீர்கள் என்றால், இது ஜனநாயகமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர், அமைச்சர் காரணம் சொல்லியிருக்கிறார். எடுத்துக்கொண்ட பணிகள் முடியாத காரணத்தால் நீட்டிக்கப்படுகிறது.

திரு. துரைமுருகன்: Fundamentally it is wrong, தவறு Sir இது. இது முறையே அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திரு. துரைமுருகன்: நான் ஒருவராக நின்று எதிர்க்கிறேன்.